# பெண்கள் பற்றிய சமூக உளவியல் கட்டமைப்பும், கருத்தியல் வன்முறையும்

**Fathima Nafla. K.L.**

Department of Social Sciences, South Eastern University of Sri Lanka

*naflikl1992@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

மொழி, பண்பாடு, கலாசாரம், நாகரீகம் என்பனவெல்லாம் இயற்கையின் வெளிப்பாடுகளல்ல. அவை சமூகக் கருத்தியல்களால் காலாகாலம் உருவாக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டு தனக்கானதொரு அடித்தளத்தை உருவாக்கி ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஆதிக்கக் கருத்தியல்கள் பெண் மையப் படுத்தியவாறான கலாசாரக் காவலரண்களாக உருவாகின. இவை உருவாக்கிய பண்பாட்டியல் ரீதியிலான போதனைகள் சமூகக் கருத்தியல்களில் ஆட்கொண்டு பெண்கள் மீதான வன்முறையாக வெளிப்பட்டது. இதில் கலை, இலக்கியம், சினிமா போன்றவற்றினூடான கருத்தியல் உருவாக்கமானது ‘பெண்’ என்பதற்கான கட்டமைப்பினை உருவாக்கிக் கட்டிக்காப்பதில் பெரும்பங்கினை வகிக்கின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட புனிதம் எனும் கட்டமைப்பின் மூலம் மனித உணர்வுகளும் உரிமைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இச்செயற்பாடு மாற்றப்பட வேண்டியது அவசியம் பற்றிய சாத்தியங்கள் தொடர்பில் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதனடிப்படையில் ‘பெண்’ பற்றிய சமூக உளவியல் கட்டமைப்பானது தகர்க்கப்படல் சாத்தியமானதா? என்பதே இவ்வாய்விற்கான மையப்பிரச்சினையாகும். இக்கட்டமைப்பானது மாற்றப்பட வேண்டிய அவசியம் உணரப்படினும் அதற்கான இலகுவான சாத்தியப்பாடு இல்லை என்ற முடிவு பெறப்படுகின்றது. எனவே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றின் தொடர்ச்சியாக செயல்படுவதை விட்டும் வெளியேறி அதற்கான மாற்று என்ன என்பது பற்றி சிந்திப்பதன் தேவையையும் இக் கட்டுரை விளக்குகின்றது. மேலும் இவ்வாய்வு பண்பு ரீதியிலான விபரிப்பு முறை மற்றும் விமர்சன முறையில் அமையப்பெற்றுள்ளது என்பதனால் இதற்கான தரவுகள் புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெறப்பட்டவையாகும்.

பிரதான சொற்கள் : இலக்கியம், பெண், சினிமா, கட்டமைப்பு, சமூக உளவியல்

## அறிமுகம்

சமூகக் கருத்தாடல்களில் ஆண் - பெண் எனும் பாகுபாட்டு ரீதியான முன்வைப்புக்கள் ஆதிக்க மனநிலையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டவை என்ற விமர்சனங்கள் பல்வேறு பரிமாணங்களில் நீட்சி பெற்றிருந்தன. இதன் பின்னணியில் மையவாதச்சிந்தனை முனைப்புப் பெற்றிருந்தமை பிரதான காரணமாக முன்வைக்கப்பட்டது. அதாவது, ஆண் மையச்சிந்தனையின் விளைவாகவே பெண்ணடிமைத்தனம் உருவாக்கியது என்ற குற்றச்சாட்டுக்கள் உருவானதைத் தொடர்ந்து பெண்ணியம் மற்றும் பெண்ணிலைவாதம், மையம் - விளிம்பு, கட்டுடைப்பு போன்ற சொல்லாடல்கள் முக்கியம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களும் வளர்ச்சியும் கருத்தியல் கண்ணோட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. அதன்பின்னரே அதுவரை காலமும் நம்பப்பட்டு வந்த பாலினக்கருத்தியல்கள் மற்றும் ஆண் - பெண் உறவு என்பனவற்றை ஒரு மாற்றுக்கண்ணோட்டத்தில் நோக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

ஆண் - பெண் எனும் வேறுபாடுகள் பால் ரீதியாக அமையப்பெற்றவையா?, பாலின ரீதியாக அமையப்பெற்றவையா? என்ற கேள்விகளுக்கு விடை காணும் முயற்சியில் பெண்ணிலைச் சிந்தனையாளர்கள் ஈடுபட்டனர். அத்தகைய ரீதியில் எழுந்த சிந்தனைகள் மைய நீரோட்டச்சிந்தனையின் ஆதிக்கத்தை தகர்க்கும் கருத்துக்களை உருவாக்கியது. இதனடிப்படையிலேயே பெண் பற்றிய சமூக உளவியல் கட்டமைப்பு

எவ்வாறு அமைகின்றது என்பது நோக்கப்பட வேண்டியதாகின்றது. ஒரு கருத்தியல் உருவாவதற்கும் அது எல்லோராலும் பின்பற்றப்படும் பெறுமானங்களாக (Values) அமைவதற்குமான காவலரண்களாக கலாசாரம், பண்பாடு, மதம், விழுமியங்கள் மட்டுமன்றி கலை, இலக்கியம், சினிமா போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

அவ்வகையில் 'பெண்' என்பதற்கான சமூக உளவியல் கண்ணோட்டம் உருவாவதற்கு இது போன்ற கருத்தியல் காவலரண்கள் எத்தகைய செல்வாக்கினைப் பெறுகிறது, அதன் மூலமாக பெண்கள் மீதான வன்முறைகள் கருத்தியல் ரீதியில் எவ்வாறு நியாயப்படுத்தப் படுகின்றன என்பதையும் இக்கட்டுரை வாதிக்கின்றது.

## பாலின வேறுபாடுகளும் சமூகக் கருத்தியல்களும்

ஆண், பெண் என்ற பாலின ரீதியான பிரிப்புக்கள் இயற்கையாகவே அமைந்தவையா? அல்லது சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டவையா? என்ற ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாலின அடிப்படையில் வேறுபாடுகள் மற்றும் அடையாளங்களை உருவாக்குவதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியானது பலனளித்தது என்றே கூற முடியும். குறிப்பிட்ட வரையறைகளை உருவாக்கவும், தனித்த இயல்பில் தக்க வைத்துக்கொள்ளவும் பாலின வேறுபாடுகள் பெரிதும் துணைபுரிந்தன.

அவ்வகையில் பாலின ரீதியான வேறுபாடுகள் கருத்தியல் வன்முறையினை தக்கவைத்துக் கொண்டு வந்திருக்கிறது எனலாம். ஆண் / பெண் பாகுபாடு குறிப்பாக இரண்டு அடிப்படையில் நிகழ்கிறது. அவை,

- பால் (Sex) ரீதியான பாகுபாடு
- பாலினம் (Gender) ரீதியான பாகுபாடு

பால் / பாலினம் குறித்தான பாகுபாடானது உயிரியல் ரீதியானதாகவும், சமூக ரீதியானதாகவும் வேறுபடுத்தப்படுகிறது. உயிரியல் ரீதியாக ஆண் / பெண் அடையாளங்கள் இனவிருத்தி உறுப்புக்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. பிறப்பின் அடிப்படையில் இது வெறும் வேறுபாடு மட்டுமே. இதில் ஏற்றத்தாழ்வு இருப்பதில்லை. ஆனால் யதார்த்த வாழ்வில் ஆண் மேலானவனாகவும், பெண் கீழானவளாகவும் கருதப்படும் போக்கு காணப்படுகிறது. இது பாலினப் (Gender) பிரிப்பாகும். இது சமூக ரீதியாக கட்டமைக்கப்படுவது. வளர்ப்பு முறை, வாய்ப்புக்கள், வாழ்வனுபவங்கள் அடிப்படையில் ஆண், பெண் இருபாலாருக்கும் உள்ள ஏற்றத்தாழ்வைக் கொண்டு உருவான கூறுகளே பாலினம் எனப்படுகிறது. (மங்கை, 2005: 7)

இவ்வாறு காலங்காலமாக கட்டமைக்கப்பட்ட ஆண் - பெண் கருத்தியல்கள் ஆண் என்பவன் யார்? பெண் என்பவள் யார்? என்பதற்கான விளக்கங்களை உருவாக்கி ஏற்றத்தாழ்வான வரிசைப்படுத்தல்கள், மைய – விளிம்பு நிலை உருவாக்கங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. சமூகத்தால் உருவாக்கப்படும் இக்கருத்தியல் ஆண் / பெண் என்பதற்கான பண்புகளை உருவாக்கி விடுகிறது. அவ்வாறு உருவாக்கப்படும் பண்புகள் வரையறுக்கப்பட்ட அளவில் ஒரு எல்லையை வகுத்துக்கொள்கிறது. 'ஆண்' எனும் பாலின உருவாக்கத்தில் 'ஆண்பிள்ளை அழக்கூடாது', 'ஆண்கள் வீரமானவர்கள்', 'ஆண் தான் தீர்மானம் மேற்கொள்பவன்', 'ஆணே குடும்பத்தின் தலைமை ஏற்கத்தகுதியானவன்' போன்ற கற்பிதங்கள் துணை நிற்கின்றன. அதேபோன்று 'பெண்' எனும் பாலின அமைப்பானது, 'பெண் புத்தி பின்புத்தி', 'பெண்பிள்ளை சத்தமாக பேசக்கூடாது', 'பெண் அதிர்ந்து நடக்கக் கூடாது', 'பெண்கள் பொத்திப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்' போன்ற கற்பிதங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. இவ்வாறு

சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உருவாக்கப்படும் இதுபோன்ற கற்பிதங்கள் ஆண், பெண் என்பதற்கான சமூக உளவியல் கட்டமைப்பை உருவாக்கி விடுகின்றன. (நப்லா, 2017 : 36)

இத்தகைய கருத்தியல்கள் வெளிப்படையான கருத்துருவாக்கமாக முன்வைக்கப்படுவதில்லை. சமூக நிறுவனங்களான மதம், கலாசாரம், விழுமியங்களூடாக நம்ப வைக்கப்படுவதுடன் கலை, இலக்கியம், சினிமா போன்றவற்றினூடாக வலியுறுத்தப்பட்டு வாழ்வியலுடன் பிணைந்தவாறான விம்பத்தை உருவாக்குகிறது. வெளிப்படையாக நிகழும் பெண்கள் மீதான வன்முறை பற்றிய பேச்சுக்கு மத்தியில் கருத்தியல் வன்முறையும், அது மிக நுண்ணிய ரீதியில் நிகழ்த்தப்படுமாற்றையும் பேச வேண்டியது கட்டாயமானதாகிறது.

**'பெண்' எனும் சமூக உளவியல் கருத்தமைவு.**

'பெண்' எனும் தன்னிலை உருவாக்கம் பெண்ணின் இயல்புகளை குறித்துக் காட்டுவதன் மூலமும் அத்தன்னிலைக்கான அடையாளத்தை சுட்டிக்காட்டுவதன் மூலமும் நிகழ்கிறது. பால் ரீதியிலான பிரிப்பானது இயற்கையானது. அது அங்கீகரிக்கப்படக் கூடியது. அதாவது பிறப்பு ரீதியில் பெண் தான் குழந்தை சுமக்க முடியும், பாலூட்ட முடியும். ஆணின் பொறுப்பு விந்தணு சேர்க்கை மட்டுமே. இந்த வாதம் ஆண் / பெண் குணநலன்களில் சில சாராம்ச வேறுபாடுகள் உண்டு. ஆனால் இதிலிருந்து உருவாக்கப்படும் கற்பிதங்கள் தொடர்பில் ஆராய்கின்ற போது மாற்றமான சில வரையறைக் கருத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மங்கை, 2005: 8)

பொதுவான நோக்கில் 'பெண்' எனும்போது 'அவள் இரக்கமானவள்', 'பொறுமை உடையவள்', 'விட்டுக்கொடுத்துப் போகக்கூடியவள்', 'தாராள மனமுடையவள்', 'மன்னிக்கக்கூடியவள்' என்ற கற்பிதங்களூடாகவே அடையாளம் காட்டப்படவும் புரிந்து கொள்ளவும் படுகிறாள். இதனாலேயே இக்கருத்தமைவுகளுக்கு எதிரான குணம் அல்லது செயற்பாடு பெண்களிடமிருந்து வெளிப்படுகிற போது, 'ஒரு பெண்ணாக இருந்து கொண்டு நீ எப்படி இப்படிச் செய்யலாம்', 'ஒரு பெண்ணுக்கு இது பொருத்தமான நடத்தை அல்ல' போன்ற கேள்விகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

எனவே சமூகம் கட்டமைத்து வைத்திருக்கும் 'பெண்' என்பதற்கான உளவியல் இதனை அடிப்படையாகக்கொண்டே புரிந்து கொள்ளப்படுகிறது. மட்டுமன்றி அவ்வாறே சமூகத்துக்கு சமூகம் கடத்தப்பட்டும் வருகிறது

**பெண்களும் பண்பாட்டுக்கட்டமைப்பும்.**

பெண்ணியம் என்றும் பெண்ணிலைவாதம் என்றும் பேசத்தொடங்கி நூற்றாண்டுகள் கடந்தநிலையில் இது 17 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்தது என்றும் 18 ஆம் நூற்றாண்டுக்குரியது என்றும் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

பெண்ணியவாதத்தினூடாக காலத்துக்குக்காலம் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டதனால் ஒரு முடிந்த முடிவான வரைவிலக்கணத்தையோ, விளக்கத்தையோ முன்வைப்பது பொருத்தமுடையதாகாது.

சமகால பெண்ணியவாதக் கோட்பாடுகளைப்பற்றிய தார்ப்பரியங்களை பகுப்பு ரீதியாக வகுப்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். பெண்களுக்கு ஏற்படும் சுரண்டல் வகைகளுக்கும் உரிமை மறுப்புக்களுக்கும் (exploitation) அவர்களது அடக்கு

முறைகளுக்கும் (Oppression), கீழ் நிலைகளுக்குமான காரணங்களை இனங்காணும் வழிமுறைகளில்கூட பெண்ணிலை வாதிகளுக்கிடையில் விவாதமுண்டு. அபிப்பிராய பேதங்களுண்டு. பெண்களது உடல் உறுப்புக்களே அடிப்படையில் அவர்களது இழிநிலைக்குக் காரணம். அதாவது பெண்களது பால்மையே பெண்களுக்கு எதிரி எனச்சிலர் கருதுகின்றனர் (Bio Logical). பால்நிலைப்பாட்டு கற்பிதங்கள், அதாவது பால்மையை அடிப்படையாகக்கொண்டு பெண்ணுக்கும் ஆணுக்கும் சமூக வரையறைகளால் ஏற்படுத்தப்பட்ட பிரிவினைகளும் பாகுபாடுகளுமே காரணம் என்பது சிலரது கருத்தாக இருக்கிறது. பொருளாதாரக் காரணிகளே பெண்களை அடிமைப்படுத்துகிறது என்ற கருத்துக்களும் உள்ளன.(செல்வி திருச்சந்திரன், 1998:2-3)

பெண்கள் பற்றிய பண்பாட்டுக் கட்டமைப்பு என்பது மறைமுகமான கட்டுப்பாடுகளை விதிக்கும் செயன்முறை எனலாம். அதாவது வெளித்தெரியாத வகையில் நம்ப வைக்கப்பட்ட கருத்தியல்களால் இது நிகழ முடியும். ஒரு உளவியல் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் பெண்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்டுகின்றனர். அதாவது மற்றவர்களுக்காக அனுதாபம் காட்டல், அன்பு, தியாகம், விட்டுக்கொடுத்தல், போட்டியின்மை போன்ற பண்புகள் இயற்கையிலேயே அமைந்தவை அல்லது இயல்பான பெண்களுக்கான பண்புகள் என்ற கட்டமைப்பை வழங்குவதன் மூலம் சமரச ரீதியிலான ஆதிக்கம் நிகழ்த்தப்படுகிறது. இது வெளித்தெரிவதில்லை, அத்தோடு அதுதான் உண்மை என்ற கற்பிதங்களால் நம்பவைக்கப்படுவதால் நியாயப்படுத்தல்களை உருவாக்கி விடுகிறது. இவ்வாறு பண்பாட்டினால் நம்ப வைக்கப்படும் கருத்தமைவுகள் வன்முறைக்கான வழியைத் திறந்து விடுகின்றன.

**குடும்பமும் பாலின (Gender) ரீதியிலான பெண்ணடிமைத்தனமும்.**

குடும்பங்களில் பொதுவாக பெண்ணுக்கான வேலைகள், ஆணுக்கான வேலைகள் என்ற பாகுபாட்டு பிரிப்பு முறைமைகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் வீட்டு வேலைகள், குடும்ப வேலைகள் என்பவை பெண்ணுக்கானவையாக கருதப்படுவதும், பெண்களையே அதற்காக காலம்காலமாக பயிற்றுவிக்கப்படுவதும் நிகழ்கிறது. இது பாலின ரீதியிலான இயல்பினைத் தீர்மானிக்கும் விடயமாகும். முதலாளித்துவ சமுதாயத்தில் தொழில் ரீதியிலான பெண்கள் உழைப்பு வரவேற்கப்படினும், அதில் ‘இரட்டைச்சுமை’ என்ற அமைப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது. அதாவது தொழிலுக்குச் செல்கின்ற பெண் என்ற போதும் வீட்டு வேலைகளையும் தானே செய்கின்ற அமைப்பு காணப்படுகின்றது. ஏனெனில் பெண் எனும் பாலினத்திற்கான பண்புகளாகவே அவை சமூகத்தால் கட்டமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

ஒரு பெண் திருமணத்திற்கு தயாராகிறாள் எனில் அவளுக்கு வழங்கப்படும் அறிவுரைகள் இத்தகைய ரீதியிலேயே வழங்கப்படுகின்றன. ‘பொறுமையாக இருக்க வேண்டும்’, ‘அதிகம் பேசக்கூடாது’, ‘வீட்டு வேலைகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும்’, ‘வீட்டுக்கு அடங்கிப்போக வேண்டும்’, ‘கணவருக்கு பிடிக்காததை செய்யக்கூடாது’, ‘வீட்டை விட்டு வெளியேறக்கூடாது’ போன்ற கருத்தமைவுகள் ஒரு பெண்ணுக்கான வழிநடத்தல்களாக முன்வைக்கப்படுகின்றன. எனவே பெண் என்பதற்கான சமூக உளவியல் கருத்தமைவில் ‘தனியான விருப்பம் இருக்கக்கூடாது, தனக்கான யோசனை இருக்கக்கூடாது’ என்றவாறான அடிமைத்தனத்தினை ஆதரிப்பது மிக வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் அது அவ்வாறே நம்ப வைக்கப்படுவதனால் நிகழும் வன்முறை குறித்து கவனம் கொள்ளப்படுவதில்லை அல்லது குறைவான அளவிலேயே காணப்படுகின்றது.

மரபார்ந்த ஆணாதிக்கம் பொருளாதார உற்பத்தியில் பெண்ணின் உழைப்பை அங்கீகரிக்கின்ற போதிலும், அதிகமாக வீட்டுப்பணியில் ஈடுபடுவதையே சமூக

நியதியாக்கியிருக்கிறது. எனவே பெண்களின் உழைப்பு ஆணாதிக்கச் சமுதாயத்தைச் சார்ந்தது. குடும்பத்தில் பெண் வீட்டுப்பணிகளைச் செய்தல் இயற்கையானது, உலகளாவியது, தேவையானது என்றே கூறுகின்றனர். அது மூன்று வழிகளில் நியாயப்படுத்தப்படுகிறது. உயிரியல் அடிப்படையில் ஆண் வேட்டையாடச் செல்லல், பெண் வீட்டில் பணிபுரிதல், மானுடவியல் அடிப்படையில் ஆண் மிகவும் பலம் வாய்ந்தவன், கருத்தரிக்கும் போதும் குழந்தையைப் பராமரிக்கும் போதும் பெண் பலம் குறைந்தவளாகவே இருக்கிறாள், பெண் வீட்டில் பணி புரிவதற்கும், ஆண் வெளியில் வேலை செய்வதற்கும் பாலினத் தொன்மமே காரணம் எனப்படுகிறது. இது சமூக அமைப்பை மறுஉற்பத்தி செய்கின்றது. எல்லாச் சமூகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சமூகவியல் அடிப்படையில் பணி வேறுபாடு பாலினம் சார்ந்தது. குடும்பத்திற்குத் தேவையானது.(சுரேஸ்,2013). இதனடிப்படையில் பெண்களின் உழைப்பும் உற்பத்தியும் ஆதிக்கத்திற்கு உட்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகின்ற நிலமை உருவாகின்றது எனலாம்.

**பெண்கள் பற்றிய சமூக உளவியல் கட்டமைப்பை உருவாக்கும் தளங்கள்.**

இக்கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போன்று பண்பாடு மற்றும் கலாசாரக் கருத்தியல்கள் மாத்திரமன்றி கலை, இலக்கியம், சினிமா கூட இத்தகைய கட்டமைப்பும் கருத்தியல் வன்முறையும் ஏற்பட வழிவகுக்கின்றன எனலாம். அதனை பின்வரும் எடுகோள்களால் உதாரணப்படுத்த முடியும்.

1. இலக்கிய வடிவங்களான சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் போன்றவை வழியாக பாலினப்பிரிப்பு சார்ந்த பெண் பற்றிய ஒரு உளவியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதற்கான எடுகோள்களைக் காட்ட முடியும். அதாவது பெண் பற்றிய பாத்திர வடிப்பும், சித்தரிப்புக்களும், பெண்களுக்கு உரித்தான இயல்புகளாக நம்பப்படும் உளவியலாக உருவாக்கப்படுவதன் மூலம் பாலினத்தை கட்டமைத்து விடுகிறது.

உதாரணமாக : தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி

**‘அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (காவு – 96)**

என்பதன்படி பெண்களுக்கு அச்சம், நாணம், மடம் என்பன கட்டாய இலக்கணமாகும் என்ற கருத்து குறிப்பிடப்படுகிறது. இது பின்னர் சமூகப்பண்பாடுகளாக உருவாக்கம் பெற்று பெண்களுக்கெதிரான வன்முறையாக மாற்றம் பெற்றிருக்கிறது.

ஔவையாரின் ஒரு பாடலில்கூட

...... **அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்....**

என்பதன் மூலம் குறித்த பண்புகளை பெண்களுக்கு உரித்தானதாக கட்டமைத்திருப்பதானது வன்முறையின் வடிகாண்களாக உருவாக்கப்பட்டிருப்பதை காணமுடியும்.

2. காட்சி வடிவில் அமையப் பெற்றிருக்கும் தமிழ் சினிமாவின் பாடல்கள், கதையமைப்பு, பெண் பாத்திர அமைப்பு போன்றவையும் ஆணாதிக்க மனநிலையுடனே இன்றுவரை உருவாக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கருத்தியல்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவதும், கருத்தியல் வன்முறைகளை நியாயப்படுத்துவதுமே அதன் நுண்ணிய வெளிப்பாடாகவுள்ளது.

சினிமாப் பாடல்களில் ‘இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்புள’ என்பதில் தொடங்கி ‘பொம்பளங்க காதலத்தான் நம்பி விடாதே’ வரை பெண் என்பதற்கான வரையறைகளை

கட்டமைப்பதிலும், அவ்வாறு கட்டமைக்கப்பட்டதிலிருந்து மீறப்படுகின்றபோது தண்டனைகளை அறிவிப்பதிலும் சினிமாவின் காட்சிப்பங்களிப்பு மிதமிஞ்சியது.

கதையமைப்பும், காட்சி வடிவங்களும்கூட ஆண் மைய அமைப்பில் உருவாக்கப்பட்டதாகவும், பெண் இயல்புகளை மீறாத வகையில் விளிம்பு நிலைப்படுத்தப்பட்ட வகையில் உபதேசம் வழங்குபவையாகவும் அமைக்கப்பட்டு வருவதானது மறைமுகமான வன்முறையாகவே அமைகின்றது எனலாம்.

எனவே விலக்கவும் மீறவும் முடியாதளவில் பெண் பற்றிய சமூக உளவியல் கருத்தமைவுகள் கட்டமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

**முடிவுரை**

பெண் எனும் சமூக உளவியல் கட்டமைப்பைத் தீர்மானிப்பதில் பண்பாடு, கலாசாரம் மாத்திரமன்றி இலக்கியம் மற்றும் சினிமா போன்ற சமூக ஊடகங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. அது தீர்மானித்து வழங்கும் கருத்தியல்களானது நடைமுறையில் 'பெண்' பாத்திர வடிவமைப்பை அச்சொட்டாக வடிவமைப்பதுடன் அதனூடே பொருந்தி வாழப்பணிக்கிறது. இந்நிலையானது இயற்கையாக பெண்ணுக்குள்ள உளவியல் அமைப்பை கேள்விக்குள்ளாக்குவதுடன், சமூகத்தால் உருவாக்கப்படும் உளவியல் கட்டமைப்பு நோக்கிய நகர்ச்சியை உருவாக்கி விடுகிறது. இது கருத்தியல் ரீதியான வன்முறையை உருவாக்குவதுடன், அதனை மீற முடியாத நுண்ணரசியலாக செயற்படுகின்றது. எனினும் தீர்மானிக்கப்பட்ட ஒன்றின் தொடர்ச்சியாக செயல்படுவதை விட்டும் வெளியேறி கருத்தமைவுகளுக்கு பின்னாலுள்ள நுண்ணரசியலை கலைவதன் மூலம் மாற்றுப்பார்வையுடனான விமர்சன பதிலீடுகளை உருவாக்க வேண்டியது அவசியமானதாகும்.


**உசாத்துணைகள்**

## Books

- மங்கை, அ., (2005), 'பெண்ணிய அரசியல்', பரிசல் பதிப்பகம், சென்னை.
- செல்வி திருச்சந்திரன், (1998), 'பெண்நிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும் - ஒரு சமூகவியல் நோக்கு', பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
- கணேசையர் பதிப்பு, (2007), தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நாச்சினார்க்கியருரையும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

## Thesis

- நப்லா, கே. எல், (2017), பகுத்தறிவுச் சிந்தனை உருவாக்கும் தன்னிலையின் (Subject) வன்முறையைத் தகர்த்தல் - ஒரு பகுப்பாய்வு, இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்.

## Webpage

- தேவமைந்தன், (2009), பெண்ணியக்கோட்பாட்டின் தோற்றமும் ஆய்வு வளர்ச்சியும், Retrieved January, 25, 2018
- சுரேஸ், சொ., (2013), காலந்தோறும் பெண்ணடிமை : சூழல் காரணிகள் Retrieved January, 25, 2018